2nd March 1959]

Film Industry.

*503 *Q.*—Sri A. GOVINDASAMY : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

சினிமா தொழிலுக்காக வேண்டிய கச்சா பிலிம் நமது ராஜ்யத்திற்குக் குறைந்தது காரணமாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் குறையைத் தவிர்க்க சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சி என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : No representation has been received by Government about the retrenchment of workers as a result of the cut in raw-film allotment. It is however reported that out of 202 workers who were retrenched, 67 were paid retrenchment compensation and the remaining 135 were not eligible for such compensation.

Sri A. GOVINDASAMY : இந்த கச்சா பிலிம் தொழிற்சாலையொன்று ஊட்டியில் வைப்பதாக எண்ணம் இருந்ததே, அதை நிறைவேற்ற அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

Mr. SPEAKER: தாங்கள் கேட்கும் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தமேதுமில்லை.

Sri S. NAGARAJA MONIGAR : ஸார், ஒரு சிறிது, இந்த பிலிம் குறைவு ஏற்பட்டதினுலே இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள அநேகருக்கு கஷ்டம் வந்திருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. மது விலக்கு கொண்டு வந்தது போல, இந்தத் தொழில் தேவைக்கு அதிகமாகி விட்டதென்று இதைக் குறைக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தால், இதிலுள்ள மக்களுக்கு ஒரேயடியாக கஷ்டம் வருமாதலால், இப்படிச் சிறு குறைபாடுகளால் அதில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ளலாமல்லவா? ஆகையால் அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் தக்க கவனம் செலுத்துவார்களா ?

Mr. SPEAKER : The question is out of order.

Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்தப் படப் பிடிப்பில் ஈடுபட்டுள்ள ஏறக்குறைய 5,000 பணியாட்கள் அந்தத் துறையிலே நிரந்தரமல்லாத வேலையில் இருக்கிறார்கள். நிரந்தர வேலையில் இல்லாதவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதால் அது குறித்து, அவர்களுடைய நிலையையும் அறிந்து அந்த நிலைமையைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ?

Mr. SPEAKER : How does this arise out of the main question? The hon. Member is putting a general question, which I am afraid is not in order.

Sri K. ANBAZHAGAN : May I request the Chair to permit me to explaint my questions?

Mr. SPEAKER : தயவு செய்து இந்தக் கேள்வியைப் பற்றி உப கேள்வி கேளுங்கள். பொதுவான கேள்வியை இந்தக் கேள்வியின் கீழ் கேட்கக் கூடாது.

Sri K. ANBAZHAGAN : I am only referring to their grievances.

Mr. SPEAKER : The hon. Member may please put a separate short notice question.